# அக்கரைப்பற்று பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 21 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 மே 03 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2011 டிசெம்பர் 30 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, அக்கரைப்பற்று பிரதேச சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கத்தைத்தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அக்கரைப்பற்று பிரதேச சபையின் நடவடிக்கைகள் தொடர்பான நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளினது நிதிசார் விளைவுகள் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிசார் கூற்றுக்கள் சேர்ந்து நின்ற அடிப்படையில் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்களின் மாற்றீட்டுக்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மின்சாரம் வழங்குதல் சபையினால் இலங்கை மின்சார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கணக்குகளில் மின்சார நிலுவையாகிய ரூபா 23,829,350 உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) மின்சார உபகரணக் கையிருப்பாகிய ரூபா 249,762 நேரடி சரி,பிழை பார்த்தல் மூலம் உறுதி செய்யப்படாது புத்தகப் பெறுமதியில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பண்டங்கள், சேவைகள் வரியும் பெறுமதி சேர் வரியுமாகிய ரூபா 2,015,660 அனுப்பி வைக்கப்படாது வைப்புக் கணக்குகளில் தொடர்ந்து காட்டப்பட்டவாறிருந்தது.

(உ) முற்பணமாகிய ரூபா 18,495 தீர்த்து வைக்கப்படாது கணக்குகளில் தொடர்ந்து காட்டப்பட்டவாறிருந்தது.

### 1.3.3 வங்கிக் கணக்கிணக்கம்

வங்கிக் கணக்குகளில் இனங்காணப்படாத ரூபா 13,762 வரவு மீதிகள் காணப்பட்டன.

### 1.3.4 இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
| --- | --- |
| (அ) பிரதேச சபை (நிதியும் நிர்வாகமும்) விதிகள் 1988 | |
| விதி 180 | பிணை வைப்புச் செய்யவேண்டிய உத்தியோகத்தர்கள் அவ்வாறு செய்யவில்லை. |
| விதி 217 | பீஎஸ் 46க்கமைய நிலையான சொத்துப் பதிவேடு ஒன்றைப் பேணவில்லை. |
| விதி 218 | காணியும் கட்டிடங்களும் தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் சரி, பிழை பார்க்கப்படவில்லை. |
| (ஆ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | தடுத்து வைக்கும் வரியான ரூபா 12,861 அறவிடப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 6,137,259 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் லருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 5,203,387 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மிளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 274 | 274 | - |
| (ii) | குத்தகை வாடகை | 4,916 | 4.503 | 3,846 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 802 | 802 | 5 |
| (iv) | ஏனைய வருவாய் | 30,114 | 30,114 | 23,829 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தால் அறவிடப்பட்டு மாகாண இறைவரி அணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட நீதிமன்றத் தண்டப் பணமாகிய ரூபா 1,011,911 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,165,194 தொகையான முத்திரைக் கட்டணத்தைப் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.3 செலவின அமைப்பு

சபையின் மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருவாய் விடயம் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ளபடியானது | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 18,590 | 17,435 | 1,155 |
| ஏனையவை | 15,104 | 12,084 | 3,020 |
| உபமொத்தம் | 33,694 | 29,519 | 4,175 |
| மூலதனச் செலவினம் | 54,640 | 18,592 | 36,048 |
| நிகர மொத்தம் | 88,334 | 48,111 | 40,223 |

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கிகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் கீழே தரப்பட்டுள்ளது.

| பதவியின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| நிறைவேற்றுநர் | 01 | - |
| உதவு தரத்தினர் | 14 | 15 |
| ஆரம்ப தரத்தினர் | 42 | 32 |
| ஏனையோர் | - | 24 |
| | 47 | 71 |

**2.5 சொத்து முகாமைத்துவம்**

**அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன் ரூபா 1,687,426 ஆகும். இதில் ரூபா 1,469,362 ஓராண்டிற்கு மேலாக அறவிடப்பட வேண்டியனவாகும்.

**2.6 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்